**செய்தி வெளியீடு எண் : 736** **நாள்: 09.05.2022**

**செய்தி வெளியீடு**

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின்கீழ் இயங்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககத்தில் நிலை 11, ரூ.35,400 - 1,12,400 (முந்தைய சம்பள ஏற்ற முறை ரூ.9300 - 34800 + தர நாதியம் ரூ.4200) எனும் சம்பளத் திட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளருக்கான அனைத்துப் படிகளுடன் கூடிய முதல்நிலை ஓவியர் பணியிடம் ஒன்றும்;

நிலை - 15, ரூ.36200 - 114800 (முந்தைய சம்பள ஏற்ற முறை ரூ.9300 - 34800 + தர ஊதியம் ரூ.4500) எனும் சம்பளத் திட்டத்திலமைந்த தொகுப்பாளர் பணியிடம் ஒன்றும் நிரப்பப்படவுள்ளன.

முதல்நிலை ஓவியர் பணியிடத்திற்குப் பொதுப்பிரிவு முன்னுரிமையற்றவர் (General Turn - Non - Priority) எனும் இனச் சுழற்சி முறையிலும், தொகுப்பாளர் பணியிடத்திற்கு 'ஆதி திராவிடர் முன்னுரிமைப் பெற்றவர்' (Scheduled Caste - Priority) எனும் இனச் சுழற்சி முறையிலும் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விரண்டு பணியிடங்களுக்கும் அதிகபட்ச வயது வரம்பு 01.07.2021 அன்றுள்ளபடி 35. தமிழக அரசின் நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி வயது வரம்பு தளர்வு செய்யப்படும்.

ஓவியர் பணியிடத்திற்கான கல்வித் தகுதி கவின்கலை இளையர் பட்டம் (Bachelor of Fine Arts (Previously Diplomo in Fine Arts Issued by the Director of Technical Education and Training) தொகுப்பாளர் பணியிடத்திற்கான கல்வித் தகுதி தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் (தமிழில் எம்.ஏ.). விருப்பமும் தகுதியும் உடையவர்கள் வெள்ளைத்தாளில் கடவுச்சீட்டு அளவிலான ஒளிப்படத்தினை ஒட்டி பெயர், முகவரி, பிறந்தநாள், மதம், இனம், கல்வித் தகுதி, முன்னுரிமை கோருவதற்கான சான்று ஆகியவற்றுடன் தேவையான சான்றிதழ்களின் ஒளிப்படிகளைத் தற்சான்றொப்பத்துடன் (Self Attested) இணைத்து 30.05.2022ஆம் நாள் மாலை 5.30 மணிக்குள் நேரிலோ, பதிவு அஞ்சலிலோ, "இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், இயக்குநர் நகர் நிருவாக அலுவலக வளாகம் முதல் தளம், எண்.75,

சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை - 600 028" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 044 - 29520509 என்னும் தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in